தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

**மேட்டூர் அணை நீர்மட்டம் தொடர்ந்து அதிகரிப்பு: ஒரே நாளில் 3 அடி உயர்வு**



மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரேநாளில் 3 அடி உயர்ந்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால், அணைகளின் பாதுகாப்பு கருதி காவிரியில் உபரிநீர் திறக்கப்படுகிறது.

இந்த நீர்வரத்தின் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஒரேநாளில் 3 அடி உயர்ந்து 64.02 ஆக உள்ளது. அணையில் 27.77 டிஎம்சி நீர் இருப்பு உள்ள நிலையில் நீர்வரத்து விநாடிக்கு 28,981 கனஅடியாக உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 800 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

**மேட்டூர் அணை நீர் மட்டம் 64 அடியாக உயர்வு**

மேட்டூர் அணையில் நீர்மட்டம் இன்று காலை 8 மணி நிலவரப்படி, 64 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் 27.77 டி,எம்.சி. நீர் இருப்பு உள்ளது. அணைக்கு

நீர்வரத்து விநாடிக்கு 28,961 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 800 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

கடும் வறட்சி: தேங்காய் விலை இரு மடங்கு உயர்வு

கடும் வறட்சி காரணமாக தென்னை மரங்கள் காய்ந்து போனதால், விளைச்சல் பாதிக்கப்பட்டு தேங்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால், கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் வறண்டு போயின. இதனால் தென்னை மரங்கள் மொட்டை கருகி மரங்களாக காட்சியளிக்கின்றன.

இதைக் கருத்தில் கொண்டு தென்னை மரங்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்க அரசு முன்வர வேண்டும். இது மட்டுமின்றி தென்னை மரத்திலிருந்து கிடைக்கிற உப பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இது போன்ற நடவடிக்கைகளில் தமிழக அரசு ஈடுபட வேண்டும் என்று விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இது குறித்து கடலூர் உழவர் சந்தைக்கு தேங்காய் கொண்டு வரும் குள்ளஞ்சாவடி பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது: மேலும் கடும் வறட்சி காரணமாக கடலூர் மாவட்டத்தில் தென்னை மரங்கள் காய்ந்து போனது. தென்னை தொழிலை நம்பி இருந்த விவசாயிகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இருக்கும் குறைந்தபட்ச தண்ணீரைக் கொண்டு விவசாயம் செய்தாலும், தேங்காய் காய்ப்பு பிடிப்பதில்லை.

இதனால் உழவர் சந்தைக்கு தேங்காய் வரத்து குறைந்ததால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

எனவே, தேங்காய்களை பொதுமக்கள் வாங்குவதற்கு தயங்குகின்றனர். மார்க்கெட் வியாபாரிகள் தேவைக்கேற்ப வெளிமாவட்டங்களிலிருந்து, தேங்காய்களை கொள்முதல் செய்து வருகின்றனர்.

இதணால் கூடுதல் செலவு ஏற்படுவதுடன் விலையும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக தேங்காய் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ஒரு தேங்காயின் விலை ரூ.8 ஆக இருந்தது. தற்போது ரூ.16 முதல் 20 வரை விற்பனை செய்யப்படுகிறது. மேலும் ரகத்திற்கு ஏற்றாற்போல் ரூ.10-க்கும் தேங்காய்கள் விற்கப்படுகின்றன. இந்த ஆண்டும் பருவமழை பெய்யாவிட்டால் தேங்காய் விலை மேலும் கடுமையாக உயரும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**ஒடிஸாவில் 275 வெங்காய குளிர்பதனக் கிடங்குகள்**

ஒடிஸாவில் வெங்காயத்தை இருப்பில் வைக்க 275 குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்படும் என்று மாநில வேளாண் துறை அமைச்சர் பிரதீப் மகாரதி சட்டப்பேரவையில் புதன்கிழமை தெரிவித்தார்.

போதிய குளிர்பதனக் கிடங்குகள் இல்லாததால், வெங்காயத்தை நல்ல விலைக்கு விற்க முடியாமல் மேற்கு ஒடிஸா விவசாயிகள் அவதிப்படுவதை ஒடிஸா சட்டப்பேரவையில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

போதிய பதனக் கிடங்குகள் இல்லாததால்தான் தற்போது வெங்காய விலை அதிகரித்து வருகிறது என்பதை ஒப்புக்கொண்ட அமைச்சர் மகாரதி, 2013-14இல் மாநிலத்தின் வெங்காய சாகுபடி 4.32 லட்சம் டன்னாக இருந்தது என்றும் ஆனால் அந்த ஆண்டு வெங்காய நுகர்வு 2.28 லட்சம் டன்னாக மட்டுமே இருந்தது எனவும் தெரிவித்தார்.

பிஜு ஜனதாதள உறுப்பினர் பிரஃபுல்ல சமாலின் கேள்விக்கு பதலளித்த அவர் பேரவையில் மேலும் கூறியதாவது:

மாநிலத்தின் தேவையைக் காட்டிலும் இரு மடங்கு வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது.

பொலாங்கிர், காலஹண்டி, ஆங்குல், நுவபடா, சம்பல்பூர், சுந்தர்கர் ஆகிய மாவட்டங்களில் வெங்காயம் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

போதிய குளிர்பதனக் கிடங்கு வசதி இல்லாததால், இருப்பில் வைக்க முடியாமல் சாகுபடி செய்த உடனே ஆந்திரம், மேற்கு வங்க வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விவசாயிகள் விற்று வருகின்றனர். வங்க தேசத்துக்கும் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வெங்காயம் எளிதில் அழுகும் பொருள் என்பதால் சந்தையில் நல்ல விலை கிடைக்கும் வரை, தகுந்த தட்பவெப்ப சூழலில் அதை இருப்பில் வைக்க வேண்டியது அவசியம்.

மானியத்துடன் குளிர்பதனக் கிடங்குகளை அமைக்க ஆகும் செலவையும் ஏற்க அரசு தீர்மானித்துள்ளது.

வெங்காய குளிர்பதனக் கிடங்குகளை அமைப்பதற்கு காலஹண்டி, பொலாங்கிர், கோரபுட் மாவட்டங்களி0ல் 75 சதவீத மானியமும், பிற மாவட்டங்களில் 60 சதவீத மானிய உதவியும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு மற்றும் தனியார் துறைகளில் மொத்தம் 108 குளிர் பதனக் கிடங்குகள் உள்ளன. எனினும் இவற்றில் 80 கிடங்குகள் செயல்படாமல் மூடிக்கிடக்கின்றன என்று அமைச்சர் மகாரதி கூறினார்.

## கொடைக்கானலில் தோட்டக்கலை மாணவர்கள் செயல் விளக்கப் பயிற்சி

கொடைக்கானல் மேல்மலைக் கிராமத்தில் தோட்டக்கலை மாணவர்களின் செயல் விளக்கப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் கிராமத் தங்கல் திட்டம் மூலமாக மேல்மலைப் பகுதிகளில் தங்கி முகாமிட்டு பயின்று வருகின்றனர்.

மேல் மலைப் பகுதிகளான பூம்பாறை, போலூர், மன்னவனூர், கிளாவரை, பூண்டி ஆகிய பகுதிகளில் கேரட், உருளைக்கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகின்றன.

இதில் கேரட்டில் வேர்முடிச்சு ஏற்படுதல், நூற்புழுக்கள் தாக்குதலும், உருளைக்கிழங்கில் கவட்டை கிழங்குகள் பாதிப்பும் ஏற்படும். இதனால் 25 முதல் 50 சதவீதம் மகசூல் இழப்பு விவசாயிகளுக்கு ஏற்படும். இவற்றை தடுப்பது குறித்தும் விவசாயிகளுக்கும், மாணவர்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டது.

மேல்மலைக் கிராமங்களில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் உதவியுடன் விவசாயிகளுக்கு தேவைப்படும் தொழில் நுட்பங்களையும், விவசாயிகளின் அனுபவங்களையும், பயிர் செய்யும் முறைகளையும், விவசாய நிலங்களில் சூடோமோனஸ் மற்றும் வேப்பம்புண்ணாக்குகளைப் பயன்படுத்தி நூற்புழுக்களை கட்டுப்படுத்தும் முறைகளையும் மாணவர்கள் செயல் விளக்கம் செய்தனர். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் வெற்றிவேல்காளை முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும், மாணவர்களுக்கும் விளக்கமளித்தார்.

**<u>போடியில் வேளாண் கல்லூரி மாணவிகள் ஆய்வு</u>**

போடி அருகே, விவசாய நிலங்களில் மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் செயல்முறை விளக்க ஆய்வு மேற்கொண்டனர்.

வேளாண்மைக் கல்லூரிகளில் பயிலும் மாணவிகள் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கிராமங்களில் தங்கி விவசாயம் குறித்த செயல்முறை விளக்கம் பெற வேண்டும். இத்திட்டத்தின் கீழ் மதுரை வேளாண் கல்லூரியில் பயிலும் மாணவிகள் ஹேமாவதி, இத்திஸ்ரீ, கலைவாணி, கலாமணி, கார்த்திகா, கார்த்திகேயணி, மீனா, மீனாபிரியா ஆகிய மாணவிகள் போடி அருகே கோடாங்கிபட்டியில் செயல்முறை விளக்க ஆய்வு மேற்கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் தென்னை மரத்திற்கு டானிக் பயன்படுத்தும் முறை, மண் மாதிரி எடுக்கும் முறை, விதை நேர்த்தி செய்யும் முறை அவற்றின் முக்கியத்துவம் பற்றி செயல்விளக்கம் பெற்றனர். மேலும் விவசாயிகளுக்கும் செய்து காட்டி விளக்கினர்.

இதேபோல் கனுப்புழு பாதிப்பைத் தடுக்கும் முறைகளையும் எடுத்துக்கூறினர். விவசாயிகள் விவசாயம் செய்யும் முறைகளையும் அறிந்து குறிப்பெடுத்துக் கொண்டனர்.

மாணவிகளுக்கு போடி வேளாண்மை உதவி அலுவலர் அப்புசாமி வழிகாட்டினார். கோடாங்கிபட்டி விவசாயிகள் பங்கேற்று மாணவிகளிடம் செயல்முறை விளக்கம் பெற்றனர்.

## மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை வைகை அணையின் நீர் மட்டம் 3 அடி உயர்வு

தேனி மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை பெய்து வருவதால், கடந்த 4 நாள்களில் வைகை அணையின் நீர் மட்டம் 3 அடி உயர்ந்துள்ளது.

தேனி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், கண்மாய்கள் நீர்வரத்து இல்லாமல் வறண்டு காணப்படுகின்றன.

மேலும், தென்மேற்கு பருவமழையும் குறிப்பிட்ட காலத்தில் பெய்யாமல் தாமதமாகி வருகிறது. இந்நிலையில், தேனி மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் தற்போது சாரல் மழை பெய்யத் துவங்கியுள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருவதால், அணையிலிருந்து 955 கன அடி வீதம் நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால், வைகை அணைக்கு 300 முதல் 470 கன அடி வீதம் நீர்வரத்து உள்ளது.

கடந்த 4 நாள்களில் அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்துள்ளது. இந்நிலையில், மூல வைகை அணை மற்றும் தேனி மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்தால், வைகை அணையின் நீர் மட்டம் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதன்கிழமை மாலை அணைகளின் நிலவரம்:

வைகை அணை : நீர் மட்டம் - 31 அடி, நீர் வரத்து - 468 கன அடி, நீர் வெளியேற்றம் - 40 கன அடி.

முல்லைப் பெரியாறு: நீர் மட்டம் - 118.20 அடி, நீர் வரத்து - 1,587 கன அடி, நீர் வெளியேற்றம் - 955 கன அடி.

மழைப் பொழிவு (மி.மீ): பெரியகுளம் 3, வைகை அணை 3, மஞ்சளாறு அணை 4, தேனி 2.60, வீரபாண்டி 8, தேக்கடி 10.80, பெரியாறு 15.80, கூடலூர் 4.50, உத்தமபாளையம் 1, சோத்துப்பாறை அணை 3.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஜூலை 25ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3.30 மணிக்கு, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெற உள்ள இக் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, தங்களது கோரிக்கைகள் குறித்து மனு அளித்து தீர்வு காணலாம் என்று, மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

**தோட்டக்கலை மாணவிகள் பயிற்சி**

உத்தமபாளையம் வட்டம் தேவாரம் பகுதியில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி பற்றி கிராமதங்கல் திட்டத்தில் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் பயிற்சி பெற்றனர். தேவாரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மேற்குத் தொடர்ச்சிமலையின் அடிவாரப் பகுதியில் அதிக அளவில் மரவள்ளிக்கிழங்கை விவசாயிகள் பயிர் செய்கின்றனர். இங்கு விளைவித்த மரவள்ளிக் கிழங்கை சேலத்திலுள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைக்கும், இதேபோல மூணாண்டிபட்டி கிராமத்தில் இருந்து துண்டுகளாக நறுக்கி உலர்த்தப்பட்ட நிலையிலுள்ள மரவள்ளிக்கிழங்கு கேரளத்துக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

விவசாயிகள் மத்தியில் ஆர்வத்துடனும் லாபகரமான இந்த மரவள்ளிக்கிழங்கின் சாகுபடி செய்யும் முறை, களைஎடுத்தல் மற்றும் அறுவடை செய்யும் முறைகளை

கல்லூரி மாணவிகளுக்கு விவசாயி சிங்கராஜ் பயிற்சி கொடுத்தார். இந்த பயிற்சியில் பெரியகுளம் தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி மாணவிகளான சுமித்ரா, தமிழீழம், தங்கமணி, விஜி, வினோதினி மற்றொரு சுமித்ரா ஆகிய மாணவிகள் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

**விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்குதல்**

ஒருங்கிணைந்த விவசாயக் கையேடு கிடைக்கப்பெறாத விவசாயிகள், வேளாண்மை அலுவலரை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.கே.சர்மிளா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருப்பத்தூர் வட்டார வேளாண்மை துறையின் சார்பில் வேளாண் உற்பத்தியினை இருமடங்காக்கி அதன் மூலம் மும்மடங்கு வருமானம் பெற்றிட பண்ணைக் குடும்பங்கள் வாரியாக மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

இவை மண் ஆய்வகங்கள் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு முன்மாதிரி முடிவுகள் வரப்பெற்று, அதன் விவரங்கள் அடங்கிய விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு நமது வட்டாரப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட கையேடு கிடைக்கப் பெறாத விவசாயிகள் தங்களுடைய போட்டோ, நிலத்தின் பட்டா, வங்கி கணக்கு எண், தொலைபேசி எண், போன்ற விவரங்களுடன் சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி அலுவலரை அணுகி பயனடையுமாறு தெரிவித்துள்ளார்.

மேலும் விவரங்களுக்கு அலுவலக தொலைபேசி இணைப்பு எண் 04577-266775 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கால்நடை பாதுகாப்பு திட்ட மருத்துவ முகாம்**

சிவகங்கை மாவட்டம் பாட்டம் கிராமத்தில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மருத்துவ முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

முகாமிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் சிவா தலைமை வகித்தார். கால்நடை உதவி இயக்குநர் மருத்துவர் ஏஞ்சலா தேவதாஸ் முன்னிலை வகித்தார். இம்மருத்துவ முகாமில் கால்நடைகளுக்கு மலடு நீக்க சிகிச்சை, குடற்புழு மருந்து, தடுப்பூசி, தாது உப்புகள் ஆகியவற்றிற்கான சிகிச்சை வழங்கப்பட்டன. மேலும் கால்நடை வளர்போர் தங்களது கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பு குறித்து விளக்கப்பட்டது. இம் முகாமிற்கான ஏற்பாடுகளை கொந்தகை கால்நடை மருத்துவர் உ. மோகன்தாஸ், உதவியாளர் லெட்சுமி ஆகியோர் செய்திருந்தனர். இப்பகுதியில் கால்நடைகளை நல்ல முறையில் வளர்க்க ஊக்குவிக்கும் பொருட்டு கால்நடை வளர்போருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**<u>கூடலூர்: கனமழையால் நீரில் மூழ்கிய விவசாய நிலங்கள்</u>**

கூடலூர் பகுதியில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக விவசாயப் பயிர்கள் மற்றும் தாழ்வான நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில், தொடர்ந்து நாளுக்குநாள் மழை தீவிரமடைந்து வருகிறது. இதனால் நீர்நிலைகள் நிரம்பி வழிகின்றன. பாண்டியாறு, மாயாறு, பொன்னாணி ஆறு, காளம்புழா ஆறு உள்பட அனைத்து சிற்றாறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயப் பயிர்கள் மற்றும் தாழ்வான நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. பயிர்கள் முற்றிலும் அழுகும் நிலையில் உள்ளன.

**<u>வையப்பமலையில் உழவர் மன்றம் துவக்கம்</u>**

ராசிபுரம் அடுத்த வையப்பமலையில் பாங்க் ஆப் இந்தியா கிளையின் சார்பில் உழவர் மன்ற தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

நபார்டு வங்கியின் துணைப் பொது மேலாளர் பூவராகவன் தலைமை வகித்தார்.

வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் பி.அசோக்குமார், பட்டு வளர்ப்புத் துறை துணை இயக்குநர் பி.வெங்கடாசலம், வன விரிவாக்க அலுவலர் கே.சேகர், விவசாயிகள் சங்கத் தலைவர் ஆர்.சுந்தரம், கே.வி.கே., விவசாயிகள் கூட்டமைப்புத் தலைவர் சங்கரன், வங்கிக் கிளை மேலாளர் குணசேகரன், வங்கி விவசாய அலுவலர் மொகமத் அமானுல்லா மதானி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

**7 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.2.25 கோடிக்கு விற்பனை**

பருத்திக்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருச்செங்கோடு வேளாண் உறபத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க மல்லசமுத்திரம் கிளைக்கு புதன்கிழமை 7 ஆயிரம் மூட்டைகள் பருத்தி விற்பனைக்கு வந்தன.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்து விவசாயிகள் இவற்றைக் கொண்டு வந்தனர். இவை ரூ.2.25 கோடிக்கு விற்பனையானது. சுரபி ரகம் குவிண்டலுக்கு ரூ.6,900 முதல் ரூ. 7,950 வரை விற்பனையானது. பிடி ரகம் ரூ.4,900 முதல் ரூ.5,550 வரை விலை போனது. பருத்திக்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இத் தகவலை சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

**மோகனூர் வாய்க்காலுக்காக கொரம்பு அமைக்கும் பணி தொடங்கியது**

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வாய்க்காலுக்காக கொரம்பு அமைக்கும் பணி புதன்கிழமை தொடங்கியது.

மோகனூர் வாய்க்கால் மூலம் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால், கோரை போன்ற பயிர்கள் சாகுபடி ஆகிறது.

இந்நிலையில், நன்செய் இடையாறில் கொரம்பு நீர்ப் பிடிப்பு பகுதியில் ஆறு பள்ளமாகவும், வாய்க்கால் மேடாகவும் மாறியதால் தண்ணீர் வரத்து குறைந்தது. இதனால் மோகனூர் வாய்க்கால் கடைமடை பகுதி வரை தொடர்ந்து தண்ணீர் பற்றாக்குறையாக இருந்து வருகிறது. இதுகுறித்து விவசாயிகள் பல்வேறு மனுக்கள் அளித்தும் கோரிக்கை விடுத்தும் வந்தனர்.

இந்நிலையில் புதன்கிழமை பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் சண்முகம் முன்னிலையில் பொக்லைன் இயந்திரம் மூலம் பரமத்தி வேலூர் காசி விஸ்வநாதர் காவிரிக் கரை பகுதியில் கொரம்பு வாய்க்கால் வெட்டும் பணி துவங்கியது. இதில் காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு எதிர்ப்புறம் உள்ள மயானத்திற்கு அருகில் கொரம்பு வாய்க்கால் வெட்டப்படுவது தொடங்கி பழைய கொரம்பு வாய்க்கால் வரை வெட்டும் பணி நடைபெற்று வந்தது.

காவிரியாற்றின் 5-வது கண் பாலத்தில் இருந்து மயானம் அருகே தற்பொழுது வெட்டப்பட்டுள்ள கொரம்பு வரை பொக்லைன் இயந்திரம் மூலம் வெட்டப்படும் என பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர். மயானப் பகுதியில் இருந்து 5-வது கண் பாலம் வரை கொரம்பு வாய்க்கால் வெட்டப்பட்டால் பாலம் வலுவிழக்கும் நிலை உள்ளதாகவும்,பொதுமக்கள் காவிரியாற்றுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையும் ஏற்படும் என தெரிவித்தனர். ஒவ்வொரு ஆண்டும் ஆடி 18 பண்டிகையை முன்னிட்டு முதல் நாள் இரவில் இருந்து பொதுமக்கள், புதுமணத் தம்பதியினர் உள்ளிட்டோர் காவிரியில் புனித நீராடி பல்வேறு பூஜைகள் செய்வது வழக்கம். காசிக்கு அடுத்தபடியாக உள்ள மிகவும் பிரசித்தி பெற்ற பரமத்தி வேலூர் காசி விஸ்வநாதர் ஆலயம் அமைந்துள்ள காவிரிக் கரையில், திதி கொடுத்தால் மிகவும் விசேஷம் என்பதால் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமானோர் முன்னோர்களுக்கு திதி கொடுப்பதற்காக வந்து செல்கின்றனர். மேலும் இக் கோயில் அமைந்துள்ள காவிரியில் குளித்தால் மோட்சம் ஏற்படும் என்பது இப் பகுதி மக்களின் ஐதீகமாக உள்ளது.

இந் நிலையில், ஆடி 18 பண்டிகை வரை இப் பணியை பொதுப்பணித் துறையினர் நிறுத்தி வைக்க வேண்டும் எனவும், ஆடி 18 பண்டிகைக்குப் பிறகு

பொதுமக்களுக்கும்,வெளியூர்களில் இருந்து திதி மற்றும் புனிதத் தீர்த்தம் எடுக்க வருபவர்களுக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல் இப் பணியை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், வருவாய்த் துறை மூலம் காவிரி ஆற்றில் மணல் அள்ளுவதைத் தடுப்பதற்காக வெட்டப்பட்டுள்ள குழிகளால் வழக்கமாக காவிரிக்கு வந்து செல்லும் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். அந்தக் குழிகளை வருவாய்த் துறையினர் உடனடியாக மூடி வழக்கம்போல் பொதுமக்கள் இடையூறின்றி சென்று வர ஆவன செய்ய வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சம்பாவுக்கான தொடக்கப் பணிகளில் ஆற்றுப்பாசன விவசாயிகள் தீவிரம்

டெல்டா மாவட்டங்களில் குறுவைக்கான நடவுப்பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. குறுவை சாகுபடி செய்யாத ஆற்றுப்பாசன விவசாயிகள் மேட்டூர் அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருவதை முன்னிட்டு, சம்பாவுக்கான முன்கட்டப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

நிகழாண்டில் ஜூன் 12-ல் மேட்டூர் அணை திறக்கப்படாததால், டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது. அதன்படி ரூ. 32.9 கோடி ஒதுக்கீடு செய்து, உரங்கள், வேளாண்மைக் கருவிகள் உள்ளிட்ட பொருள்களை மானியத்தில் வழங்கியது.

போர்வெல் உள்ள விவசாயிகள் சமுதாய நாற்றங்கால் அமைத்து நாற்றுகளை தயார் செய்து மற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்து குறுவை சாகுபடி செய்ய அறிவுறுத்தப்பட்டனர். மேலும், சமுதாய நாற்றங்கால் அமைக்கும் விவசாயிக்கு இடுபொருள் மற்றும் செலவினங்களுக்காக ரூ. 25,000 மானியமாக வழங்கியது. இதையடுத்து குறுவை சாகுபடி பணிகள் தீவிரமடைந்தன.

இதன்படி திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, அரியலூர், கடலூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் சுமார் 1,500 ஏக்கரில் திருந்திய நெல் முறையில் சாகுபடி செய்வதற்காக சமுதாய நாற்றங்கால் அமைக்கப்பட்டது. திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்றுக்கள் 15-லிருந்து 20 நாள்களுக்குள்ளாகவே முதிர்ச்சி அடைந்து விடுவதால் தற்போது நாற்றுகள் பறிக்கப்பட்டு நடவுப் பணிகளும் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

இறுதிக் கட்டத்தில் குறுவை நடவுப் பணிகள்:

திருச்சியில் 70 ஏக்கரில் அமைக்கப்பட்ட சமுதாய நாற்றங்கால் மூலம் 8,000 ஏக்கர் குறுவை சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 70% நடவுப் பணிகள் முடிவடைந்து விட்டது. இதேபோல் திருவாரூர் மாவட்டத்தில் சுமார் 55,000 ஏக்கர் அளவில் 90% நடவுப் பணிகள் முடிவடைந்துவிட்டன.

மற்ற மாவட்டங்களில் நடவுப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன என வேளாண்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படாததால் போர்வெல் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமே நாற்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் ஆற்றுப்பாசன விவசாயிகள் சம்பா சாகுபடி மட்டுமே செய்ய முடியும் என்பதால், விவசாயப் பணிகள் ஏதும் தொடங்கப்படவில்லை. குறிப்பாக, நெல் மட்டுமே அதிகம் பயிரிடப்படும் திருவாரூர் மாவட்டத்தின் கடைமடைப் பகுதிகளில் பணிகள் ஏதும் தொடங்கப்படவில்லை.

சம்பாவுக்கான பணிகள் தொடக்கம்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தண்ணீர் இல்லாத காரணத்தால் ஆற்றுப்பாசன விவசாயிகள் குறுவையை தவிர்த்தாலும் உணவுத் தேவைகளுக்காகவும், பொருளாதாரத் தேவைகளுக்காகவும் சம்பா பயிரிடுவது வழக்கம். மேலும், வடகிழக்கு பருவமழை சம்பாவுக்கு உதவும் என்பதால், குறுவை சாகுபடி குறையும் நாள்களில் சம்பா சாகுபடி அதிகமாகவே நடைபெறும்.

திருவாரூர் மாவட்டத்தில் 1,77,500 ஏக்கரில் சம்பா சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பாவுக்கான தொடக்க வேலைகளை தீவிரப்படுத்தியுள்ளனர் ஆற்றுப்பாசன விவசாயிகள்.

சம்பா சாகுபடியில் நேரடி தெளிப்பு முறையில் சம்பா சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக தற்போது விளைநிலங்கள் உழவு செய்யப்பட்டு வருவதாக கடைமடை விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வாய்க்கால்கள் தூர்வாரப்பட வேண்டும்: கிராமப்புறங்களில் விவசாய நிலங்கள் அனைத்தும் வாய்க்கால்கள் மூலமே நீர்ப்பாசன வசதியை பெறுவதால் தண்ணீர் வருவதற்குள், தற்போது நடைபெற்று வருகின்ற தூர்வாரும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும். அப்போதுதான் தண்ணீரானது கடைமடை பகுதி வரை சீராக கிடைக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## விவசாயிகளுக்கு கற்றறிவு பயணம்

பொன்னமராவதி வட்டார விவசாயிகள் கோவையில் நடைபெற்ற அக்ரி இண்டெக்ஸ் - 2014 என்ற வேளாண் கண்காட்சியை பார்வையிட அண்மையில் கற்றறிவு பயணமாக அழைத்து செல்லப்பட்டனர்.

ஆண்டுதோறும் கோயம்புத்தூர் கொடீசியா வளாகத்தில் நடைபெறும் வேளாண் கண்காட்சி நிகழாண்டு 18-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை நடைபெற்றது.

இதில் பல்வேறு நவீன தொழில்நுட்பங்களும், வேளாண் கருவிகளும் விவசாயிகளுக்கு உதவியாக உள்ள பல்வேறு இடுபொருள்கள் பற்றியும் அறிந்து கொள்ள ஏதுவாக பல அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

இக்கண்காட்சியை பார்வையிட புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொன்னமராவதி, திருமயம், விராலிமலை, அன்னவாசல் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 50 விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர்.

இதில் பங்கேற்ற விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

**<u>மாவட்டத்தில் பல்முனை பட்டு நூற்பு மையம் அமைக்கப்படும்: ஆட்சியர் தகவல்</u>**

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்முனை பட்டு நூற்பு மையம் அமைக்கப்படும் என்றார் ஆட்சியர் செ. மனோகரன்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித் துறை, ஆராய்ச்சி விரிவாக்க மையம், மத்திய பட்டு வாரியம் ஆகியவை இணைந்து புதன்கிழமை நடத்திய விழிப்புணர்வு முகாமுக்குத் தலைமை வகித்து பயனாளிகளுக்கு ரூ. 3.53 லட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கிப் பேசியது: பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலாகும். பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் மல்பரிச் செடி பயிரிட்டு பராமரித்தல், பட்டுப்புழு வளர்ப்பு செய்தல் ஆகிய 2 முக்கியச் செயல்பாடுகளைக் கொண்டது. இந்த 2 தொழில்களும் விவசாயம் சார்ந்த விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் தொழில் தொழில் முனைவோரால் மேற்கொள்ளப்படுகிறது.

நமது மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி குறித்த விழிப்புணர்வு அட்மா திட்டத்தின் மூலம் கண்டுணர்வுச் சுற்றுலா மற்றும் செயல் விளக்கங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆலங்குடி, வடகாடு, ராசாப்பட்டி, திருமயம், அரிமளம் ஆகிய பகுதிகளில் 235 விவசாயிகள் சுமார் 460 ஏக்கரில் பட்டுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு ஒரு ஏக்கர் மல்பரி நடவு செய்ய சுமார் ரூ. 1.80 லட்சம் மதிப்புள்ள மல்பரி நடவு மானியம், சொட்டுநீர்ப் பாசனம், புழு வளர்ப்புத் தளவாட மானியம் ஆகியவை வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக 5 ஏக்கர் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ரூ. 4.50 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் தெளிவாக திட்டமிட்டு ஒரு ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்வதன் மூலம் ரூ. 1.50 லட்சம் ஆண்டு வருமானம் பெற முடியும். நமது மாவட்டத்தில் பல்முனை பட்டு நூற்பு மையம் அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம் நமது மாவட்ட பட்டு விவசாயிகள் உற்பத்தி

செய்யும் பட்டுப்புழுக்களை இந்த பல்முறை பட்டு நூற்பு மையத்தில் விற்பனை செய்து விவசாயிகள் பயன்பெற முடியும் என்றார்.

முன்னதாக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை பார்வையிட்டார். இதில் உதவி இயக்குநர் (பட்டு வளர்ச்சித் துறை) மல்லிகா, மண்டல துணை இயக்குநர் ஜான்எகில்சன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**<u>வேளாண் அலுவலகர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி</u>**

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் ஸ்டாமின் மாநில பயிற்சி மையத்தில் வேளாண் அலுவலர்களுக்கான பேரிடர் மேலாண்மைப் பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜஹான், தலைமை வகித்து பேசியது: தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பணியாற்றும் வேளாண் அலுவலர்கள், துணை வேளாண் அலுவலர்களுக்கு வெள்ளம், வறட்சி, சூறைக்காற்று போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்படும் காலங்களில் பாதிக்கப்படும் பயிர்களை எவ்வாறு காப்பது போன்ற தொழில்நுட்பங்கள், பேரிடர் மேலாண்மைச் சட்டம், பயிர் காப்பீடு பற்றி தொழில்நுட்ப வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த 16}ம் தேதி தொடங்கிய முகாம் ஆகஸ்ட் 1}ம் தேதி வரை நடைபெறும். இப்பயிற்சியில் வேளாண் உதவி அலுவலர்கள், வேளாண் அலுவலர்கள், துணை வேளாண் அலுவலர்களில் நாள் ஒன்றுக்கு 40 பேர் வீதம் மொத்தம் 480

நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியை ஸ்டாமின் இயக்குநர் (பொ) வெள்ளைச்சாமி, வேளாண் கல்லூரி முதல்வர் ஜெயராமன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

**<u>விவசாயிகள் குறைதீர் கூட்டத்திற்கு பேருந்து வசதி</u>**

பெரம்பலூர் மாவட்டம், செட்டிக்குளத்தில் வியாழக்கிழமை (ஜூலை 24) நடைபெறும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்க வரும் விவசாயிகளுக்கு இலவச பேருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிகுளத்தில் திறக்கப்பட்டுள்ள வெங்காய வணிக வளாகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெற உள்ளது.

இங்கு நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகளின் நலன் கருதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வெங்காயம் வணிக வளாகத்திற்கு

செல்ல வியாழக்கிழமை காலை 10 மற்றும் 10.15 மணியளவில் தமிழக அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

எனவே, விவசாயிகள் நேரடியாக அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து செல்லும் பேருந்துகளை பயன்படுத்தி கூட்டத்தில் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

**<u>சிறு வாய்க்கால்கள், கால்வாய்களைதூர்வார ரூ. 76 கோடி ஒதுக்கீடு</u>**

திருவாரூர் மாவட்டத்தில் சிறு வாய்க்கால்கள் மற்றும் பாசனக் கால்வாய்களை தூர்வார ரூ. 76 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன்.

வலங்கைமான் ஒன்றியத்தில் அரவூர், திருவோணமங்கலம், தென்குவளவேலி, ஆலங்குடி, மாத்தூர், மாணிக்கமங்கலம், கண்டியூர் ஆகியப் பகுதிகளில் நடைபெற்றுவரும் நீர்செறிவூட்டும் திட்டம், தாய் திட்டம், பசுமை வீடு கட்டும்

திட்டம், பண்ணைக் குட்டை அமைக்கும் திட்டப் பணிகள் குறித்து புதன்கிழமை ஆய்வு மேற்கொண்ட அவர் அளித்த பேட்டி:

மாவட்டத்தில் கடந்த 2013-2014-ம் நிதியாண்டில் 20,659 பணிகள் ரூ. 272 கோடியில், 2014 - 2015-ம் நிதியாண்டில் 11,280 பணிகள் மேற்கொள்ள ரூ. 96 கோடியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செய்ய அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பெருக்கும் வகையில் நீர்மட்டத்தை உயர்த்த 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் மாவட்டத்திலுள்ள 430 ஊராட்சிகளில் 5,160 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் சிறிய, பெரிய பாசன வாய்க்கால்கள் ஊரக வளர்ச்சி முகமைத் திட்டத்தின் கீழ் தூர்வார ரூ. 76 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வலங்கைமான் பகுதியில் 2014-2015-ம் நிதியாண்டில் ரூ. 10 கோடியில் 1,286 பணிகள் செய்ய அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்றார் மதிவாணன்.

ஆய்வின்போது ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் உ. தமிழரசி, வலங்கைமான் வட்டார வளர்ச்சி அலுவலர் தில்லை நடராஜன் ஆகியோர் உடனிருந்தார்.

## <u>டிராக்டரை பயன்படுத்தி வரப்பு முகிலன்விளையில் செயல் விளக்க முகாம்</u>

முகிலன்விளையில் டிராக்டரை பயன்படுத்தி விவசாய நிலங்களில் வரப்பு அமைக்கும் பணிக்கான செயல் விளக்க முகாம் நடைபெற்றது.

இதுகுறித்து நாகர்கோவில் வேளாண் செயற்பொறியாளர் ஆனந்தராஜா வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வேளாண் பொறியியல் துறை, நாகர்கோவில் துணைக் கோட்டம் மூலம் டிராக்டரை பயன்படுத்தி வரப்பு அமைக்கும் கருவியின் செயல் விளக்க முகாம்

முகிலன்விளையில் நடைபெற்றது. இக் கருவி மூலம் சுமார் 60 செ.மீ. அகலம், 30 செ.மீ. உயர வரப்புகளை எளிதில் குறைந்த நேரத்தில் அமைக்கலாம். கருவி மூலம் தென்னைகளுக்கு இடையே வரப்பு அமைத்து ஊடுபயிர் பயிரிட்டு வருமானம் பெருக்கலாம்.

ஓர் ஏக்கர் நிலத்தில் வேலையாள்கள் மூலம் வரப்பமைக்க குறைந்தது 4 பேரும் ஒரு நாளும், ரூ. 2,400 செலவும் ஆகும். இக் கருவி மூலம் ஓர் ஏக்கர் நிலத்தில் ஒரு மணி நேரத்தில் சுமார் ரூ. 600 செலவில் வரப்பமைக்கலாம். இதன் மூலம் நேரமும் செலவும் பல மடங்கு குறைகிறது. கருவியின் மொத்த விலை ரூ. 10,500.

வரப்பமைக்கும் கருவி, இதர வேளாண் கருவிகளை வாங்க விரும்பும் விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அரசு மானியம் வழங்குகிறது.

இந்த செயல்முறை விளக்கம் முகிலன்விளையில் உள்ள தாண்டேசன் தோட்டத்தில் நடைபெற்றது.

முகாமில் வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) பி. இளங்கோ, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) டபிள்யு. போஸ்லின் வின்ஸ்டன் சாம், வேளாண் உதவி இயக்குநர் எம்.ஆர். வாணி, உதவிப் பொறியாளர்கள் பாலகிருஷ்ணன், லதா, ஆனந்தபாபு, ராதாகிருஷ்ணன் பங்கேற்றனர் என்றார் அவர்.

**<u>நெல்லை மாவட்டத்தில் 3,100 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி: வேளாண் இணை இயக்குநர்</u>**

திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ் கார் பருவத்தில் இதுவரை 2,670 ஹெக்டேரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 3,100 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி நடவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திருநெல்வேலி வேளாண்துறை இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

தாமிரவருணி பாசனத்தில் நிகழ் கார் பருவம் சாகுபடி செய்ய ஜூலை 3 ஆம் தேதி கடனாநதி, ராமநதி, கருப்பாநதி, அடவிநயினார் அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

ஜூலை 4 ஆம் தேதி பாபநாசம் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதையடுத்து திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாய் மற்றும் கோடகன் கால்வாய்களில் தண்ணீர் திறக்கப்பட்டு சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் கார் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் பாசனத் தேவைகளை கருத்தில் கொண்டு பாபநாசம் அணையில் இருந்து 1100 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கடனாநதி அணையில் இருந்து 105 கனஅடியும், ராமநதி அணையில் இருந்து 40 கனஅடியும் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இப்பாசனத்தில் அதிக மகசூல் தரும் அம்பை 16, ஆடுதுறை 45 போன்ற நெல் ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

திருந்திய நெல் சாகுபடி:

இம்மாவட்டத்தில் கார் பருவத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாகுபடி குறித்து வேளாண் இணை இயக்குநர் செ.சந்திரசேகரன் கூறியதாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து அதிக மகசூல் பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஹெக்டேருக்கு ரூ. 3,750 அரசு மானியம் வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 3,100 ஹெக்டேரில் நெல் நடவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் இதுவரை 2,670 ஹெக்டேரில் நெல் பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 4,200

ஹெக்டேரில் நெல் நடவு செய்ய தேவையான நாற்று பாவப்பட்டுள்ளது என்றார் அவர்.

**<u>ஜூலை 27 -29 வரை குற்றாலம் சுற்றுச்சூழல் பூங்காவில் தோட்டக்கலை கண்காட்சி</u>**

குற்றாலம் ஐந்தருவியில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் பூங்காவில் வரும் 27ஆம் தேதிமுதல் 29ஆம் தேதிவரை தோட்டக்கலை கண்காட்சி நடைபெறுகிறது.

இதுகுறித்து தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ்.ராஜாமுகம்மது குற்றாலத்தில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஜூலை 26ஆம்தேதி முதல் ஆக. 2ஆம்தேதிவரை குற்றாலத்தில் சாரல் திருவிழா நடைபெறுகிறது. இவ்விழாவின் போது ஐந்தருவியிலுள்ள சுற்றுச்சூழல் பூங்காவில் தோட்டக் கலைகண்காட்சி நடைபெறுகிறது.

இந்தக் கண்காட்சியை அமைச்சர் பி.செந்தூர்பாண்டியன் திறந்துவைக்கிறார். இக்கண்காட்சி மூன்று நாள்கள் நடைபெறுகிறது. சுற்றுச்சூழல் பூங்காவில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைந்துள்ளது. மா, பலா, வாழை ஆகிய முக்கனியுடன் சேர்ந்து இதர பழங்களான ஆரஞ்சு, சாத்துக்குடி, எலுமிச்சை, பம்ளிமாஸ், ஆப்பிள், அன்னாச்சி, மங்குஸ்தான், ரம்ப்ட்டான், பன்னீர்கொய்யா, மனோரஞ்சிதப்பழம், சப்போட்டா போன்ற அனைத்து வகைப் பழங்களைக்கொண்டு பழங்களின் அலங்கார வளைவு அமைக்கப்படவுள்ளது.

மேலும் ஆடவர்,மங்கையர்,குழந்தைகள் ஆகியஅனைத்து தரப்பினரும் கண்டு மகிழக்கூடிய வகையில் பல்வகை மலர்களால் அமைக்கப்படும் மலர்களின் அணிவகுப்பு, குழந்தைகளை கவரும் வகையில் மலர்களால் ஆன ஆங்கிரிபேர்டு, காய்களால் உருவாக்கப்படும் பனிக்கரடி எனும் பாண்டா, பழங்களால் அமைக்கப்படும் டிராகன் போன்ற அமைப்புகளும் காய்கனிகளை கொண்டு கார்விங் எனப்படும் சிறு சிறு பறவை, விலங்கு போன்ற அமைப்புகளும்

கண்காட்சியில் இடம்பெறுகின்றன. சுற்றுச்சூழல் பூங்காவில் நுழைவுகட்டணமாக பெரியவர்களுக்கு ரூ30-ம், சிறுவர்களுக்கு ரூ15-ம் நுழைவுக்கட்டணமாக வசூலிக்கப்படுகிறது என்றார் அவர். தோட்டக்கலை அலுவலர் பூமாலை உடனிருந்தார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: காவிரி டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி</u>

**மேட்டூர்**: குறைவான நீர் இருப்பு காரணமாக மேட்டூர் அணையில் இருந்து நீர் திறக்கப்படாததால், குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பா சாகுபடிக்காவது நீர் திறக்கப்படுமா என்ற கேள்வி, காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. இந்நிலையில், அணையின் நீர் மட்டம் 60 அடியை எட்டியுள்ளது, அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதியன்று, மேட்டூர் அணையில் இருந்து குறுவை பாசனத்திற்காக நீர் திறக்கப்படும். ஆனால், இந்த ஆண்டு அணையின் நீர் இருப்பு மிக குறைவாக இருந்ததால், அணை திறக்கப்படவில்லை. இதனால், காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சம்பா சாகுபடி கைகொடுத்தால் மட்டுமே, அவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வழக்கமாக, சம்பா சாகுபடிக்கு ஆகஸ்ட் மாத இறுதியில், மேட்டூர் அணையில் இருந்து நீர் திறக்கப்படும். மேற்கு தொடர்ச்சி மலையில், கர்நாடக மாநில பகுதியில் தொடர்ந்து தென்மேற்கு பருவமழை பெய்தால், காவிரியில் நீர் வரத்து அதிகரிக்கும். அம்மாநிலத்தில் உள்ள கபினி உள்ளிட்ட அணைகள் நிரம்பும். இதைத் தொடர்ந்து, காவிரியில் நீர் திறந்துவிடப்படும். இவ்வாறு வெளியேற்றப்படும் உபரி நீர், மேட்டூர் அணையை வந்தடையும். மேட்டூர் அணையின் நீர் மட்டம் 90 அடியாகவும், நீர் இருப்பு 50 டி.எம்.சி.யாகவும் இருந்தால் மட்டுமே சம்பா சாகுபடிக்கு நீர் திறக்கப்படும். தற்பாது நீர்வரத்து வினாடிக்கு, 28,417 கனஅடியாக அதிகரித்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம் 61 அடியாகவும், நீர் இருப்பு, 25.353 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. கர்நாடகாவின், கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் திறக்கப்பட்டுள்ள நீர் தொடர்ச்சியாக, மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. நேற்று வினாடிக்கு, 15,545 கனஅடியாக இருந்த நீர்வரத்து, இன்று வினாடிக்கு, 25,354 கனஅடியாக அதிகரித்தது. நீர்வரத்து அதிகரிப்பால், நேற்று 57.670 அடியாக இருந்த நீர்மட்டம், இன்று, 60.890 டி.எம்.சி.,யாகவும், 22.982 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, 25.354 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. ஒரே நாளில், அணை நீர்மட்டம், 4 அடியும், நீர் இருப்பு, 3 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது. ஐந்து நாளில் நீர்மட்டம், 14 அடியும், நீர் இருப்பு, 10 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது. நேற்று கபினி அணையிலிருந்து வினாடிக்கு, 32,000 கனஅடி, கே.ஆர்.எஸ்., ல் வினாடிக்கு, 6,500 கனஅடி நீர் திறக்கப்பட்டது. இதனால்,மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கர்நாடகாவின் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தொடர்ந்து மழை பொழிவு இருந்தால் மட்டுமே, நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து, மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்கு நீர் திறக்க முடியும் என்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

**<u>சோலையாறு அணை ஒரே நாளில் 16 அடி உயர்வு</u>**

**வால்பாறை**: வால்பாறையில் தொடர்ந்து கன மழை பெய்து வருவதால், சோலையாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 16 அடி உயர்ந்தது. நேற்று அணையில் நீர் மட்டம் 123 அடியாக இருந்தது. இன்று காலை நீர்மட்டம் 139.4 அடியாக உயர்நத்து. அணையில் 160 அடி வரை நீரைச் சேமிக்கலாம். தொடர்நது பெய்து வரும் மழையால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**தேங்காய், கொப்பரை இருப்பு வைத்து விற்றால் நல்ல விலை கிடைக்கும்; வேளாண் பல்கலை அறிவிப்பு**

**கோவை** : தேங்காய் மற்றும் கொப்பரையை இருப்பு வைத்து விற்பனை செய்தால் நல்ல விலை கிடைக்கும் என, வேளாண் பல்கலை கூறியுள்ளது.

தேங்காய் உற்பத்தியில் கேரள மாநிலத்தையடுத்து தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது. தற்போது, பொள்ளாச்சி சந்தையில் தேங்காய் ஒரு டன் 28, 500 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது.கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவிய வறட்சியின் காரணமாக தேங்காய் உற்பத்தி குறைந்து இருப்பதால் விலை அதிகரித்துள்ளது. தற்போது அவல்பூந்துறை சந்தையில் கொப்பரை தேங்காயின் விலை கிலோவுக்கு 96 முதல் 98 ரூபாய் வரை விற்பனை ஆகிறது. இவை வரும் பண்டிகை நாட்களில் மேலும் அதிகரிக்கும். பொள்ளாச்சி சந்தையில் இருந்த தேங்காயின் விலை மற்றும் அவல்பூந்துறை சந்தையில் நிலவிய கொப்பரையின் விலையை தமிழ்நாடு வேளாண் பல்கலையில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் செயல்பட்டு வரும் வேளாண் விற்பனை தகவல் மையம் ஆய்வு மேற்கொண்டதில், பொள்ளாச்சி பண்ணை விலை ஆகஸ்ட் மற்றும் செப்., மாதம் காய் ஒன்றுக்கு 16 முதல் 18 ரூபாய் வரை இருக்கும் என கணித்துள்ளது. மற்ற சந்தையில் பொள்ளாச்சி சந்தையை விட மூன்று ரூபாய் வரை குறைவாக இருக்கும்.கொப்பரையின் விலை அவல்பூந்துறை ஒழுங்கு முறை விற்பனை

கூடத்தில் கிலோவிற்கு 100 ரூபாய் முதல் 105 ரூபாய் வரை இருக்கும் என, கணித்துள்ளது.எனவே விவசாயிகள் தேங்காய் மற்றும் கொப்பரையை சேமித்து வைத்து செப்டம்பர் மற்றும் ஆக்டோபர் மாதங்களில் விற்குமாறு வேளாண் சந்தை தகவல் மையம் பரிந்துரைத்துள்ளது.

<u>வட மாநில வரத்து சரிவால் பூண்டு விலை இரண்டு மடங்கு உயர்வு</u>



**சேலம்**:ரம்ஜான் நோன்பு கடைபிடிக்கப் பட்டு வரும் நிலையில், வட மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டிருந்த, பூண்டு வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அதன் விலை இரண்டு மடங்கு உயர்ந்து உள்ளது.

அறுவடை**பாதிப்பு:**தமிழகத்துக்கு தேவையான பூண்டு, மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது.இந்த மாநிலங்களில் தற்போது மழை பெய்து வருவதால், அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதோடு, சேமிப்பு கிடங்குகளில் இருந்து பூண்டை வெளியே அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாத கடைசி வாரத்தில், சென்னை, சேலம், விருதுநகர் சந்தைகளுக்கு, வட மாநிலங்களில் இருந்து வாரத்துக்கு, 70 லாரிகளில் பூண்டு விற்பனைக்கு வந்தது.ஜூன், 29ம் தேதி ரம்ஜான் நோன்பு துவங்கி உள்ள நிலையில், வட மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த பூண்டு, கர்நாடகாவுக்கு செல்ல துவங்கியது. இதையடுத்து, பூண்டு வரத்து, 20 லாரிகளாக சரிவடைந்தது.ரம்ஜான்வரத்து மிகவும்

குறைந்துள்ளதால், சந்தையில், பூண்டுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. மேலும், பெரிய வியாபாரிகள் அதிக அளவில் பூண்டை இருப்பு வைத்துள்ளனர். இதன் காரணமாக, ஜூலை முதல் வாரத்தில், 90 ரூபாயாக இருந்த ஒரு கிலோ பூண்டு, 110 ரூபாயாக உயர்ந்தது.இந்நிலையில், நேற்று மேலும், 60 ரூபாய் உயர்வு ஏற்பட்டு, மொத்த விலை சந்தையில் ஒரு கிலோ பூண்டு, 170 ரூபாய்க்கு விற்பனையானது. இது, சில்லரை விற்பனையில், 200 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.நாட்டு பூண்டின் விலையில் உயர்வு ஏற்பட்டதை அடுத்து, நீலகிரி பூண்டின் விலையும், கிலோவுக்கு, 30 ரூபாய் அதிகரித்துள்ளது, நேற்றைய நிலவரப்படி, நீலகிரி பூண்டு, 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.ரம்ஜான், ஆடி மாத பண்டிகைகள் காரணமாக, பூண்டின் விலை மேலும் அதிகரிக்கும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**<u>வேளாண் மாணவியர் கிராம தங்கல் திட்டம்</u>**

**கோபிசெட்டிபாளையம்**: கோவை வேளாண்மை பல்கலை கழக மாணவ, மாணவியர்கள், கோபியில் கிராம தங்கள் திட்டம் நடத்தி வருகின்றனர்.

கோவை, வேளாண்மை பல்கலை கழகத்தில் இளங்கலை பட்டு புழுவியியல், நான்காம் ஆண்டு படிக்கும், மாணவ, மாணவியருக்கு அவரவர் பட்டப்படிப்பில், ஒரு பகுதியாக கிராமத்தங்கல் திட்ட நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ், கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தின் முதல்வர் (வேளாண்மை) மகிமைராஜா தலைமையில், மாணவ, மாணவியர் குழுக்களாக பிரிக்கப்பட்டு, வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு சென்று வருகின்றனர். அங்குள்ள பட்டு வளர்ச்சி துறையின் செயல்பாட்டையும், விவசாயிகளின் அனுபவங்களையும், நேரடியாக தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இத்திட்டம் வகுக்கப்பட்டது. பட்டு புழுவியியல் மாணவியர் தீபா, கல்பனா, காஞ்சனா, மேனகா, மிதிலாஸ்ரீ, நந்தினி, நித்யா, ரம்யா, ரிஸ்வானா அடங்கிய

குழுவினர், கோபியில் முகாமிட்டுள்ளனர். கோபி பட்டு வளர்ச்சி துறை ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன், மாணவியருக்கு பட்டு வளர்ப்பில் உள்ள தொழில் நுட்பங்களையும், அதன் நடைமுறைகளையும், விரிவாக்க மையத்தின் பணிகளை, பயிற்சி அளித்தார். மேலும், விவசாயிகளுடன் இணைந்து பழம் பூச்சி பொருக்குதல், பட்டுக்கூடு அறுவடை செய்தல் மூலமாக, விவசாயிகள் அனுபவங்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

**<u>ஆதிவாசிகளுக்கு தேயிலை வாரியத்தின் சலுகைகள் முன்னதாக வழங்க நடவடிக்கை</u>**

**கூடலூர்** : "ஆதிவாசி விவசாயிகளுக்கு தேயிலை வாரியத்தின் சலுகைகள் முன்னதாகவே வழங்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டது.

கூடலூர் நாடார் திருமண மண்டபத்தில், சி.டி.ஆர்.டி., அறகட்டளை சார்பில், ஆதிவாசிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு, கூடலூர் நகராட்சி தலைவர் ரமா தலைமை வகித்தார். சி.டி.ஆர்.டி., அறக்கட்டளை இயக்குனர் ரெங்கநாதன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில், தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசுகையில்,""தேயிலை வாரியத்தின் சலுகைகள் முன்னதாவே ஆதிவாசி விவசாயிகளுக்கு கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்," என்றார்.

ஊட்டி மத்திய மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மையத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் கோல பேசுகையில்,""ஆதிவாசி மக்கள் தங்கள் தேவைகளை அறிந்து சலுகைகள் பெற்று பயன்பெற வேண்டும்," என்றார்."விவசாய பயிர்களை சந்தை படுத்தும் முறைகள்' குறித்து உபாசி முதன்மை ஆராட்சியாளர் ராமமூர்த்தி விளக்கினார். "காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப விவசாயம்' குறித்து, கேர் இந்தியா திட்ட இயக்குனர் தேவபிரகாஷ் விளக்கினார். "மண் புழு உரம் உற்பத்தி, அதன் பயன்பாடு' குறித்து, கூடலூர் தோட்டகலை உதவி இயக்குநர் சிபிலாமேரி

பேசினார். நிகழ்ச்சியில், 200 ஆதிவாசிகளுக்கு மிளகு, கிராம்பு, பாக்கு நாற்றுகளையும், 3 சங்கங்களுக்கு தேயிலை கவாத்து வெட்டும் இயந்திரம், பசுந்தேயிலை நிரப்பும் பைகள், மற்றும் தராசுகள் வழங்கப்பட்டன. சந்திரசேகரன் நன்றி கூறினார்.

<u>**பூக்கள் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**</u>

**வேலாயுதம்பாளையம்**: கரூர் மாவட்டத்தில், நடையனூர், முத்தனூர், கவுண்டன்புதூர், சேமங்கி, மரவாபாளையம் உள்ளிட்ட பகுதிகளில், குண்டு மல்லி, முல்லைப்பூ, செண்டு மல்லி, அரளி, செவ்வந்தி, கனகாம்பரம், ரோஜா போன்ற பூக்ககள், மருவு, துளசி, கோழிக் கொண்டைப்பூ போன்றவை பயிரிட்டுள்ளனர்.

வேலாயுதம்பாளையம், கொடுமுடி, பிலிக்கல்பாளையம், பாண்டமங்கலம், பரமத்தி, தண்ணீர் பந்தல் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள், பூக்களை வாங்கி செல்கின்றனர்.

கடந்த வாரம், குண்டு மல்லி பூ கிலோ, 300 ரூபாய், முல்லைப் பூ, ஒரு கிலோ, 200 ரூபாய், கனகாம்பரம், 300 ரூபாய், துளசி ஒரு கட்டு, 10 ரூபாய், அரளி ஒரு கிலோ, 120 ரூபாய், கோழிக்கொண்டை ஒரு கட்டு, 50 ரூபாய், சம்மங்கி, 300 ரூபாய் விற்கப்பட்டது. நேற்று, குண்டுமல்லி பூ ஒரு கிலோ, 80 ரூபாய், முல்லை பூ, 60 ரூபாய், அரளி, 40 ரூபாய், சம்மங்கி, 90 ரூபாய், கோழிக்கொண்டை, 25 ரூபாய், துளசி, ஒரு கட்டு ஐந்து ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்கிச்சென்றனர். பூக்களின் உற்பத்தி அதிகரிப்பாலும், கோவில் மற்றும் திருமண நிகழ்ச்சிகள் இல்லாததாலும், பூக்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. பூ விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**<u>வேளாண் விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு</u>**

**பெரம்பலூர்**: திருச்சி விதை ஆய்வு துணை இயக்குனர் உத்தரவுப்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விதை விற்பனை நிலையங்களில், திருச்சி விதை ஆய்வாளர் அருள்ராஜ், அரியலூர் விதை ஆய்வாளர் காசிநாதன் ஆகியோர் ஆய்வு செய்தனர். தமிழகத்தில், விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகள் கிடைக்கவும், முறையற்ற விதை விற்பனையை கண்காணிக்கவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது, விதை விற்பனை உரிமம், விற்பனை பட்டியல் ஆய்வு செய்யப்பட்டது. விற்பனை பட்டியலில் விதையின் பெயர், ரகம், காலாவதி நாள், குவியல் எண் மற்றும் வாங்குபவர் கையொப்பம் இடப்பட்டுள்ளதா எனவும், விதை சேமிப்பு முறைகள் சரியாக கடைபிடிக்கப்படுகின்றனவா என்றும் ஆய்வு செய்யப்பட்டது. இருப்பு பதிவேடு மற்றும் இருப்பு சரியாக பராமரிக்காத விற்பனை நிலையங்களுக்கு விதை விற்பனை தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டது. மேலும், விதை உரிமம் பெறாமல் விற்பனை செய்வது தெரியவந்தால், விதை கட்டுப்பாட்டு சட்டத்தின்படியும், அத்தியாவசிய உணவு சட்டத்தின்படியும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், என்று எச்சரிக்கப்பட்டது.

ஆய்வின் போது, பெரம்பலூர் விதை ஆய்வாளர் சுந்தரராஜ் உடனிருந்தார்.

**<u>விவசாயிகளுக்கு பால் மாடு கடன்; மதுரை ஆவின் நிர்வாகம் தாராளம்</u>**

தேனி: விவசாயிகளுக்கு பால்மாடு வாங்க கடன் உதவி செய்யும் வங்கிகளில், ஆவின் நிர்வாகம் டெபாசிட் செய்து வருகிறது.

மதுரை ஆவினுக்கு மதுரை, தேனி மாவட்டங்களில் உள்ள 875க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் இருந்து பால் சப்ளை செய்யப்படுகிறது. இந்த சங்கங்களில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது பால் கறக்கும் மாடுகள், பால் கறக்க தயாராக உள்ள மாடுகள் உட்பட ஒரு லட்சம் பால் மாடுகள் வரை வளர்க்கப்படுகின்றன. ஆவினுக்கு

தினமும் ஒரு லட்சத்து 95 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. தவிர சென்னைக்கு அனுப்ப தினமும் 25 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. ஆனால் தேவையை விட குறைவாகவே பால் கிடைத்து வருகிறது. தற்போது கடும் வறட்சி நிலவுவதால் பலர் விவசாயத்தை கை விட்டு, பால் மாடுகள் வளர்த்து பிழைப்பு நடத்தி வருகின்றனர்.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், ஆவின் பால் சப்ளையை அதிகரிக்கவும் ஆவின் நிர்வாகம் ஏற்பாடுகளை செய்து வருகிறது. இதற்காக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் பால் மாட்டுக்கடன் பெற விரும்பினால், அவர்களுக்கு இந்தியன் வங்கி அல்லது கனரா வங்கி மூலம் கடன் வழங்க ஏற்பாடுகளை செய்து வருகிறது.இதற்காக இந்த வங்கிகளில் ஆவின் முதலீடு செய்து வருகிறது. தவிர தாட்கோ மூலம் மானியத்திட்டங்களில் விவசாயிகளுக்கு பால் மாடுகள் வழங்கி ஆவின் வருமானத்தை உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக பால் மாடுகள் வாங்க தயாராக உள்ள விவசாயிகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

**<u>கம்பம் பகுதியில் நிலக்கடலை சாகுபடி அழிவின் விளிம்பில்! விவசாயத்துறை நடவடிக்கை தேவை</u>**

கம்பம் : கம்பம் பகுதியில் நிலக்கடலை சாகுபடி பரப்பளவு கடுமையான சரிவை சந்தித்து, அழிவின் விளிம்பிற்கு சென்றுள்ளது. சாகுபடி பரப்பை அதிகரிக்க விவசாயத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேனி மாவட்டத்தில் நிலக்கடலை சாகுபடி மானாவாரி மற்றும் கிணற்றுப் பாசனம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. லோயர்கேம்பில் ஆரம்பித்து கூடலூர் ,கம்பம், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, உத்தமபாளையம், கோம்பை, தேவாரம் வரை 5,000 ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வந்தது. கடந்த 10

ஆண்டுகளில் மானாவாரி நிலங்களில் நிலக்கடலை சாகுபடி பரப்பு படிப்படியாக குறைந்து தற்போது காணாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது 500 ஏக்கருக்கும் குறைவான பரப்பில் கூடலூரில் மட்டும் மேற்கொள்ளப்படுகிறது. பெரும்பாலான விவசாயிகள் நிலக்கடலை சாகுபடியை மறந்து விட்டனர். இந்த நிலைக்கு காரணம் குறித்து விவசாயத்துறையினரிடம் கேட்டதற்கு, "நிலக்கடலை ஆடி மற்றும் தைப்பட்டங்களில் சாகுபடி செய்வார்கள். இந்த சீசன்களில் நல்ல மழை கிடைத்து வந்தது. கடந்த 10 ஆண்டுகளாகவே போதிய மழை இல்லை. மேலும் ஒரு ஏக்கருக்கு 200 கிலோ விதை தேவைப்படும். விதையின் விலை அதிகமாக இருப்பதாலும் விவசாயிகள் சாகுபடியை விரும்பவில்லை. மேலும் 105 நாட்கள் கழித்து அறுவடை செய்யும் போது, விலை நிலவரம் எப்படி இருக்கும் என்று கூற முடியாது. நிலக்கடலைக்கு மாற்றாக எள், சூரியகாந்தி, குறிப்பாக மொச்சை நல்ல லாபத்தை தருவதால், விவசாயிகள் நிலக்கடலையை விரும்பவில்லை' என்கின்றனர்.எனவே எண்ணெய் வித்துப் பயிர்களில் முதன்மையானதும், பொதுமக்கள் விரும்பி சாம்பிடுவதுமான நிலக்கடலை சாகுபடி குறைவதை தடுத்து நிறுத்த விவசாயத்துறை திட்டம் ஒன்றை தயாரித்து, விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

## <u>போடி ஒன்றியத்தில் ரூ.2.51 கோடி செலவில் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு பணிகள்</u>

தேனி : தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் போடி ஊராட்சி ஒன்றியத்தில் 2 கோடியே 51 லட்சத்து 63 ஆயிரத்து 200 ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் நடந்துள்ளன.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் போடி ஒன்றியத்தில் 10 நீர் வடிப்பகுதி குழுக்கள் மூலம் நிலம் சமன்படுத்துதல் பணி 445.433 ஹெக்டேரில் 9 லட்சத்து 85 ஆயிரத்து 700 ரூபாய் மதிப்பில் செய்து முடிக்கப்பட்டது. 1,060 ஹெக்டேர் தரிசு நிலத்தில் மண் வரப்பு 22 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில்

அமைக்கப்பட்டது.

நிலத்தடி நீரை பெருக்க 44 கசிவுநீர் குட்டைகள் அமைக்கும் பணி, 19 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும், 1.6 லட்சம் ரூபாய் செலவில் 4 இடங்களில் ஊரணி தூர்வாரும் பணியும் நடந்துள்ளது. 15 லட்சத்து 24 ஆயிரத்து 700 ரூபாய் செலவில் 83 இடங்களில் பண்ணை குட்டை அமைக்கும் பணியும், 66 லட்சத்து 5 ஆயிரத்து 500 ரூபாய் செலவில் 125 இடங்களில் பெரிய, சிறிய தடுப்பணைகள் அமைக்கும் பணியும் முடிந்துள்ளது. மண் அரிப்பை தடுக்க 6.3 லட்சம் ரூபாய் செலவில் 23 இடங்களில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணியும் நடைபெற்றுள்ளது. 61.68 லட்சம் ரூபாய் செலவில் 246 இடங்களில் கம்பி வலையிட்ட வெற்றுக்கல் தடுப்பணைகள் அமைக்கும் பணியும், 8 லட்சம் ரூபாய் செலவில் 16 இடங்களில் குளம் தூர்வாரும் பணியும், ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் 1160 மீட்டர் நீளத்திற்கு கால்வாய் தூர்வாரும் பணியும் நடந்தது. பழச்செடிகள் 19 லட்சத்து 86 ஆயிரத்து 300 ரூபாய் செலவில் 312 ஹெக்டேரிலும், 16 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் 440 ஹெக்டேரில் சமூக காடு வளர்க்கும் பணியும், 2 லட்சம் ரூபாய் செலவில் ஆயிரம் இடங்களில் வீட்டு தோட்டங்கள் அமைக்கும் பணியும், 2 லட்சம் ரூபாய் செலவில் ஆயிரம் இடங்களில் செய்முறை விளக்கமும் நடந்துள்ளது. மொத்தம் இத்திட்டத்தில் 2 கோடியே 51 லட்சத்து 63 ஆயிரத்து 200 ரூபாய்க்கு பணிகள் நடந்துள்ளன. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்திற்கு மத்திய, மாநில அரசிடம் இருந்து நிதி 5 தவணைகளாக பெறப்பட்டு, 4 முறை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமும், 5வது தவணை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமும் நடந்துள்ளது. மேற்கண்ட தகவலை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை வேளாண் துணை இயக்குனர் அழகு நாகேந்திரன் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தகவல் தெரிவித்துள்ளார்.

**ஆண்டிபட்டி தாலுகாவில் வாழை; தோட்டக்கலைத்துறை நடவடிக்கை**

**தேனி** : ஆண்டிபட்டி தாலுகாவில் வாழை சாகுபடி பரப்பை அதிகரிக்க தோட்டக்கலைத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

தேனி மாவட்டத்தில் தற்போது 9,000 ஹெக்டேரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. வாழை ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரித்து வருவதால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. தவிர வெளிநாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இன்னும் தேனி மாவட்டத்தில் விளைச்சல் போதவில்லை. வெளிநாடுகளில் உள்ள சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு வாழை தொடர்ந்து ஏற்றுமதி செய்ய குறைந்தபட்சம் 30 ஆயிரம் ஹெக்டேராவது சாகுபடி செய்ய வேண்டும். பல வெளிநாடுகள் ஏற்றுமதி ஆர்டர் வழங்கி வருவதால் மாவட்டத்தில் வாழை உற்பத்தியை 9000 ஹெக்டேரில் இருந்து 30 ஆயிரம் ஹெக்டேராக உயர்த்தும் முயற்சியில் தோட்டக்கலைத்துறை இறங்கி உள்ளது. காற்றினால் வாழை அதிகம் பாதிக்கப்படுவதை தடுக்க போடி, சிலமலை, ராசிங்காபுரம் பகுதியில் சித்தகத்தி செடிகளை வளர்த்து உயிர்வேலி அமைத்து காற்றை தடுத்து அதற்குள் வாழை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அதேபோல் கோவிந்தநகரம், ஏத்தக்கோயில், வருஷநாடு, வெங்கடாசலபுரம், கடமலை, மயிலை பகுதிகளிலும் வாழை சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

கரும்பு விவசாயிகளுக்கு ரூ.10,542 கோடி நிலுவை பஸ்வான் தகவல்

**புதுடெல்லி**: நடப்பு ஆண்டில் ஜூலை 15ம் தேதி நிலவரப்படி கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் கொடுக்க வேண்டிய பாக்கி ரூ.10 ஆயிரத்து 542 கோடி ஆகும். இது, நடப்பு 2013-2014ம் ஆண்டு சர்க்கரை பருவத்திற்கு

வழங்க வேண்டிய மொத்த தொகையில் 18.5 சதவீதமாகும். இந்த தகவலை மத்திய உணவுத் துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் மக்களவையில் பேசுகையில் தெரிவித்தார். தமிழக கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் தரவேண்டிய பாக்கி ரூ.638 கோடி என்றும் அவர் தெரிவித்தார். உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள விவசாயிகளுக்கு ரூ.6 ஆயிரத்து 737 கோடியை சர்க்கரை ஆலைகள் தரவேண்டியுள்ளது என்றும் பஸ்வான் குறிப்பிட்டார்.

நடப்பு 2013 அக்டோபர் முதல் 2014ம் ஆண்டு செப்டம்பர் வரையிலான பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 2.43 கோடி டன்னாக இருக்கும் என்று ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்து வரும் பருவத்தில் இந்த உற்பத்தி 2.53 கோடி டன்னாக அதிகரிக்கும் என்று சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) தெரிவித்துள்ளது.

## சூரிய ஒளியில் இயங்கும் மோட்டார் அமைக்க மானியம்

**பழநி**, : விவசாயி கள் சூரிய ஒளி மூலம் இயங் கும் மோட்டார் அமைக்க ரூ.3.84 லட்சம் மானியமாக வழங்கப்படுவதாக தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையிலும், விவசாயத்திற்கு தடையில் லா மின்சாரம் கிடைக்கவும் விவசாயிகளுக்கு சூரிய ஒளி மூலம் இயங்கும் மின்மோட்டார் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி விவசாயிகளின் திறந்த வெளி கிணறுகளுக்கு அரசு மானியமாக ரூ.3.84 லட்சம் வழங்கப் பட உள்ளது. இதில் விவசாயிகளின் பங்குத்தொகை ரூ.1.17 லட் சம். விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுக லாம் என தோட்டக்கலை உதவி இயக்குநர் சிவசாமி தெரிவித்துள்ளார்.

## சிவகங்கை மாவட்டத்தில் கால்நடை தீவன உற்பத்திக்கு மானியத்துடன் பயிர் சாகுபடி திட்டம்

**சிவகங்கை**, : சிவகங்கை மாவட்டத்தில் கால்நடைகளுக்கான தீவன பற்றாக்குறையை போக்க மானியத்துடன் கூடிய பயிர் சாகுபடி திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட நிர்வாகம் சார்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பால் உற்பத்தியை பெருக்க பசுந்தீவனம் வழங்குவது முக்கியமாகும். இதற்காக தீவன பற்றாக்குறையை போக்க தீவன சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் தீவனப்பயிர் இறவையில் 0.25ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்ய 100சதவீத மானியம் அளிக்கப்படும். மானாவாரியில் 0.25ஏக்கர் தீவனச்சோளம் மற்றும் தீவன தட்டைப்பயிறு சாகுபடி செய்ய ரூ.550 மானியமாக வழங்கப்படும். தெளிப்பு நீர்ப்பாசன கருவி நிறுவ ரூ.18ஆயிரத்து 750(75சதவீத மானியம்) அளிக்கப்படும். அகத்தி, மர வகை தீவன பயிர் சாகுபடி செய்ய 100சதவீத மானியத்துடன் அகத்தி விதைகள் வழங்கப்படும். அசோலா திடல் அமைக்க ரூ.1600மானி யம் (100சதவீ தம்) வழங்கப்படும். இத்திட்டஙகளில் பயன்பெற விரும்பும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு விண்ணப்பம் அளிக்கவும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>25ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்</u>

**காஞ்சிபுரம்**, : காஞ்சிபுரம் கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை: விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட முகமை கூட்டரங்கில் வரும் 25ம்தேதி 11 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் பாஸ்கரன் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில், வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொது பணி, வேளாண்மை பொறியியல், மீன் வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை

அலுவலர்கள் விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண்கின்றனர். எனவே, காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் தவறாது கலந்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**<u>மீன் உணவு பொருள் தயாரிப்பு பயிற்சி</u>**

**ராமேஸ்வரம்**, : தங்கச்சிமடம் டாக்டர் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் மதிப்புக்கூட்டிய மீன்உணவுப் பொருட்கள் தயாரிப்பு குறித்த பயிற்சி நடந்தது. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஐதராபாத் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் இணைந்து நடத்திய பயிற்சி முகாமில் பங்கேற்ற பெண்களுக்கு இறால் ஊறுகாய் தயாரித்தல், மீன்கட்லெட், மீன்பக்கோடா, மீன்கோலா உருண்டை, மீன்பஜ்ஜி, இறால் பிரியாணி, மீன்மசாலா கருவாடு தயாரித்தல் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. தங்கச்சிமடம் கிராம வளமைய திட்ட அலுவலர் தமிழழகன், பீடு டிரஸ்ட் இயக்குனர் ஆல்ட்ரின் பயிற்சி அளித்தனர். ராமநாதபுரம் மாவட்டத் தொழில் மைய ஆய்வாளர் ரபீக்உசேன், ராமேஸ்வரம் மீன்துறை ஆய்வாளர் பாலமுருகன், மீனவர் சங்க தலைவர் அருளானந்தம், ஆராய்ச்சி நிறுவன பிரதிநிதி ஜோப் ஆகியோர் பேசினர். தங்கச்சிமடம், ராமகிருஷ்ணபுரம், நடராஜபுரம் பகுதியை சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர்.

**<u>செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்ப கருத்தரங்கு</u>**

**ஸ்ரீமுஷ்ணம்**, : ஸ்ரீமுஷ்ணத்தில் விவசாயிகளுக்கு செம்மை கரும்பு சாகுபடி குறித்த தொழில்நுட்ப கருத்தரங்கு நடைபெற்றது. காட்டுமன்னார்கோவில் வேளாண் உதவி இயக்குநர் கனகசபை தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் அமரேசன் வரவேற்றார். விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலைய தொழில் நுட்பநர்கள் கண்ணன், விஜயகீதா உள்ளிட்டோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு கரும்பு ஒரு விதை பரு சீவல் முறை, சீரான நாற்றங்கால் பெறும்

வழிமுறை, பார் அமைத்தல், அனுகூலங்கள் கரும்பு மகசூல் கூடுதலாக உற்பத்தி செய்வதற்கான துல்லிய பண்ணை திட்டமுறையை நடைமுறைபடுத்தும் வழிமுறைகள் குறித்து விளக்கினர். இதில் ஆனந்தகுடி, எசனூர், மதகளிர்மாணிக்கம், குணமங்கலம், ஸ்ரீ நெடுஞ்சேரி உள்ளிட்ட பல்வேறு பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர்கள் வெற்றிசெல்வன், திருமுருகன், இளந்திரையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**<u>மழையை எதிர்பார்த்து பலனில்லை விவசாயிகளின் நிலையான வருமானத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணையம் அவசியம் வேளாண் உதவி இயக்குனர் தகவல்</u>**

**சாத்தூர்**, : பருவ மழையை எதிர்பார்த்து பலன் இல்லை என்றும் நிலையான வருமானத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணை யம் அவசியம் என்றும் விவசாயிகளை வேளாண்மை துறை அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர். பருவமழை பொய்த்ததன் காரணமாக விவசாய நிலங்கள் தரிசு காடுகளாக காட்சியளிக்கிறது. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து கிணற்று பாசனமும் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளும் கிராமங்களை விட்டு நகரங்களுக்கு இடம் பெயர் ந்து வருகின்றனர். விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றப்படுவதால் நிலங்களில் உள்ள மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன. இருக்கும் ஒருசில விவசாயிகள், போதிய நிதி ஆதாரம் இல்லாததால் சாகுபடி தொழில் நுட்பங்களை முழுமையாக கடைபிடிக்க முடியாத நிலையில் உள்ளனர். இதில் விருதுநகர் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் சராசரி மழை அளவு 626 மி.மீட்டராகவே உள்ளது. இதனால் மானாவாரி சாகுபடியே நடைபெற்று வந்தது. தற்போது மானாவாரி பயிர்கூட செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர். விவசாயம் தவிர வேறு தொழில் தெரியாத நிலையில் விவசாயிகள் தங்களை பாதுகாக்கும் வகையிலும், தங்களது தொழிலை பாதுகாக்கும் வகையிலும் ஒருங்கிணைந்த பண்ணையம் செய்யுமாறு

வேளாண்மைதுறை அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர். இது குறித்து சாத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஹரிதாஸ் கூறும்போது, விவசாயிகள் நிலையான வருமானத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணையம் அமைக்க வேண்டும். இதன் மூலம் குடும்ப நபர்களுக்கு சுயவேலை வாய்ப்பை உருவாக்கி கொள்ள முடியும். ஒருங்கிணைந்த பண்ணை யம் என்பது ஆடுகள் வளர் ப்பு, கோழி, முயல், தேனீ, பன்றி, மீன், உணவு காளான், மண்புழு மற்றும் பழ மரங்கள் வளர்த்தல் ஆகும். ஒருங்கிணைந்த பண் ணையம் விவசாய நிலங்களுக்கு ஏற்ப செய்யப்படுவதன் மூலம் சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும். நீர்வளம், நிலவளம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உணவு பாது காப்பு, சுய வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் மேம்பாடு என "ஒரே கல்லில் பல மாங்கா" என்பது ஒருங்கிணைந்த பண்ணையத்தால் சாத்தியமாகும். மேலும் வேளாண்மை இயக்குநர், அதிகாரிகளை தொடர்பு கொண்டு விபரம் அறியலாம் என்று தெரிவித்தார். அதிக மழை பெய்யும் காலங்களில் வழிந்தோடும் நீரை அந்தந்த பகுதிகளில் சேமித்து வைக்க 5 முதல்10 சென்ட் அளவில் 1.5மீட்டர் ஆழத்தில் பண்ணைக்குட்டை அமைக்க வேண் டும். மழைநீர் மண்ணில் உருடுவதை தடுக்கும் வகை யில் பாலீதீன் விரிப்பு கொ ண்டு பண்ணை குட்டையி னை முழுவதுமாக பரப்பி விளிம்புகளில் களிமண் பூச வேண்டும். சேமிக்கும் தண்ணீரை பயிர் மற்றும் மரக்கன்று வளர்ப்பிற்கும், கால்நடைகளின் குடிநீர் மற்றும் இதர தேவைக்கு பயன்படுத்திக்கொள்ள முடியும்.

**<u>பெண் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பது பயிற்சி</u>**

***சீர்காழி***, : சீர்காழி அருகே அல்லிவிளாகம் கிராமத்தில் காரைக்கால் மாவட்ட வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையும், இந்திய பாரம்பரிய அறிவியல் கழகம் சார்பில் காரைக்கால் மாவட்ட பெண்விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு இயற்கை வேளாண்மை தொழில்நுட்ப முறைகள் தொடர்பான ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. காரைக்கால் வேளாண் இணை இயக்குநர்

மதியழகன் தலைமை வகித்தார். திட்ட துணை இயக்குநர் முத்துகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் முருகானந்தம் வரவேற்றார். விழாவில் காரைக்கால் மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண் முகமை, இந்திய பாரம்பரிய அறிவியல் கழகம், திருச்சி அன்பில் தர்மலிங்கம் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு பெண் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல், இயற்கை வேளாண்மை குறித்து பயிற்சி அளித்தனர். இதில் 100க்கும் மேற்பட்ட பெண் விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். விவசாயி ஆறுமுகம் நன்றி கூறினார்.